[7th November 1966

திரு. எம். எஸ். செல்வராஜன் : இவைகளுக்கு லைசென்சு வழங்கிய காலம் எப்போது? வெகு காலத்திற்கு முன்பே லைசென்சு வழங்கப்பட்டும் தொழிலை ஆரம்பிக்க இவ்வளவு கால தாமதம் எதனால் ஏற்பட்டுள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சாந்தா கெமிகல்ஸ் என்ற ஒன்றே ஒன்றுக்குத்தான் நீண்டகாலத்திற்கு முன்பே லைசென்சு வழங்கப்பட்டது. பல்வேறு கஷ்டங்கள், நிதி வசதிக் குறைவு ஆகிய காரணத்தினால்தான் சீக்கிரம் அவர்களால் ஆரம்பிக்க முடியவில்லை.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பொரேஷன்

* 472 கேள்வி.—திரு. ம. கமலநாதன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனில் 31—3—1966 வரை வேலை செய்து வந்து, தற்பொழுது வேலையில்லை என நீக்கப்பட்ட அதிகப்படியான சிவில் இன்ஜினீயர்களை ராஜ்ய சர்க்கார் பணிகளின் கீழ் எடுத்துக் கொள்ளும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பரேஷன் வேலை நீக்கம் செய்துள்ள உபரி இளநிலைப் பொறியாளர்களில் சிலரை மாநிலப்பொறியியல் பணியில் எடுத்துக்கொள்வது பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்தது. மாநிலப் பொறியியல் பணியில் நியமனம் பெறுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பெற தமிழ்நாடு அரசாங்கப் பணியாளர் தேர்வுக் கழகத்துக்கு விண்ணப்பித்துக்கொள்ள, வேலை நீக்கம் செய்யப்பட்ட அப்பொறியாளர்களுக்கு அனுமதி வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அரசாங்கப் பணிக்காக நிச்சயிக்கப்பட்ட வயதைவிட அவர்கள் வயது அதிகமாயிருந்தாலும் அவர்கள் மேற்சொன்னவாறு விண்ணப்பித்துக் கொள்ளலாம். தகுதியுள்ள நபர்கள் விஷயத்தில் வயது குறித்த விதிகள் தளர்த்தப்படும். வேலையிலிருந்து நீக்கப்பட்ட மூன்று பொறியாளர்கள் தொழில் துறையில் கட்டிடப்பிரிவில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இப்போது கொடுக்கப்பட்டிருக்கிற சலுகை போன்று, மற்ற கட்டுமான வேலைத் திட்டங்களில் ஈடுபட்டிருக்கிறவர்களிடையே வேலை நீக்கம் வரும்போது அளிக்கப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தவிதமான கோரிக்கை, மனுக்கள் வந்தால் கவனிக்கப்படும்.

திரு. டி. சார்ச்சா கவுடர் : நெய்வேலியிலே ஏறக்குறைய 350-க்கு மேற்பட்ட இன்சினியர்கள் வேலை இழந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. பொதுவாக, தமிழ் நாடு பூராவும் எஞ்சினியர்கள்

வேலை இல்லாமல் இருக்கிறார்கள். இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க அரசாங்கம் என்ன திட்டத்தை வைத்திருக்கிறது? அடுத்த ஆண்டு இஞ்சினியரிங் கல்லூரிக்கு மாணவர்களைச் சேர்க்கும்போது எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போட்டால், பொதுவாக இஞ்சினியரிங் நிலைமைகளைப் பற்றிப் பதில் சொல்ல முடியும்.

MR. SPEAKER: Question No. 473.

SRI V. KRISHNAMOORTHY: Sir, I want to put a supplementary question.

MR. SPEAKER: I have called the next question. Let the hon. Member please resume his seat. I did not call the hon. Member to put a supplementary question.

SRI V. KRISHNAMOORTHY: I have drawn the attention of the Hon. Speaker to put a supplementary question.

MR. SPEAKER: Only after I called the next question.

SRI V. KRISHNAMOORTHY: Sir, in view of the urgency of the matter, I request that a half-hour discussion may be allowed.

MR. SPEAKER: I will consider the hon. Member's request.

* 473 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any lignite fertilizer plant for the manufacture of "slow-acting" fertilizer is to be set up at Neyveli; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b) No scheme has been so far contemplated by the Neyveli Lignite Corporation concerning manufacture of slow acting fertiliser.

High Pressure Boiler Plant

* 474 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to increase the capacity of the High Pressure Boiler Plant in Tiruchirappalli during the Fourth Plan Period; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b) The High Pressure Boiler Plant at Tiruchirappalli, is rated for a capacity of 0.75 million K.W. equivalent of steam. It is proposed to expand this plant during the Fourth Plan to about 1.5 million K.W.